உரிமைகள் - இலங்கை

# கல்விக் கொள்கையை சீரமைக்குமாறு சிறுவர்கள் கோருகிறார்கள்

- பைசல் சமத் -

கொழும்பு (ஐபிஎஸ்)- தலைநகரில் நடைபெற்ற சிறுவர்களுக்கான கருத்தரங்கு ஒன்றில் இலங்கை பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கும் சிறுவர்களுக்குமென நிறுவப்பட்டுள்ள விசேட கருமபீடமொன்றின் முயற்சிகளைப்பற்றி அரசாங்க அதிகாரிகள் புகழ்ந்து பேசுவதில் ஈடுபட்டிருந்தபோது சிறுவன் ஒருவன் குறுக்கிட்டு "கருமபீடத்தில் எவருமே இல்லாவிட்டால் எவ்வாறு அது வெற்றிபெறும்?" என்று ஒரு கேள்வியை போட்டான்.

சிறுவனின் கேள்வி கருத்தரங்கில் கலந்துகொண்ட அதிகாரிகளை எவ்வாறு வாயடைக்கச் செய்தது என்பதுபற்றி சிறுவர் பாதுகாப்பு அமைப்பின் கொழும்பு அலுவலதத்தை சேர்ந்த சிரேஷ்ட சிறுவர் உரிமைகள் நிபுணர் லக்ஷ்மன் மாலவதந்திரிகே எடுத்துக் கூறினார். சிறுவர் விவகாரங்களுடன் சம்பந்தப்பட்ட அரசாங்க அமைப்புகளை பிரதிநிதித்துவப் படுத்தும் அதிகாரிகள் பலர் சிறுவர்கள் தாங்களும் தங்களது எதிர்காலமும் சம்பந்தப்பட்ட விவாரங்கள் தொடர்பாக விசாரணை செய்பவர்களாகவும் போரிடும் குணம் உள்ளவர்களாகவும் கோரிக்கை விடுப்பவர்களாகவும் இருப்பார்களென எதிர்பார்ப்பதில்லை என்று திரு. மாலவதந்திரிகே கூறினார்.

தற்போது யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் இலங்கையின் 20 வருடகால இன மோதல்களின் விளைவுகளிலும் பார்க்க கல்வியே சிறுவர்களின் மிக முக்கிய தேவை என்பதை இளைஞர்கள்கூட எடுத்துக் கூறி வருகிறார்கள்.

சிறுவர்களுக்கான பயிற்சிப் பாசறைகள், கருத்தரங்குகள், வயதுவந்தவர்களுடனான பேட்டிகள் ஆகியவற்றில் விசேடமாக கிராமப்புற சமூகங்களில் கல்விக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்தி கொடுக்குமாறு இளைஞர்கள் கோரி வருகிறார்கள்.

தென்னிலங்கையில் காலி, மாத்தறை ஆகியவற்றிலிருந்து வடமுனையான யாழ்ப்பாணம் வரையிலுள்ள சிறுவர்கள் கல்விக்கு சிறந்த வசதிகளை ஏற்படுத்தி தருமாறு கோரி வருகிறார்கள்.

யுத்தத்தை எடுத்துக் கொண்டாலும் பாரிய தாக்கம் ஏற்படுவது கல்வியில்தான் கட்டடங்கள் அழிக்கப்பட்டு விட்டன. ஆசிரியர்கள் இல்லை. புத்ததகங்களும் ஏனைய உபகரணங்களும் பற்றாக்குறையாக இருக்கின்றன என்று யாழ். இந்துக் கல்லூாயில் ஜீசிஈ உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் 18 வயதான தர்மல சத்தியநேசன் கூறுகிறார்.

நாட்டின் வடபகுதியில் விடுதலைப் புலிகளின் கோட்டையாக விளங்கிய யாழ்ப்பாணம் இலங்கையிலேயே மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். சிறுபான்மைத் தமிழர்களுக்கு தாயகம் கோரும் விடுதலைப் புலிகளின் தாகத்தினால் ஏற்பட்ட ஆயதப் போராட்டத்தினால் கட்டடங்கள், வீடுகள், விவசாயம் எல்லாமே அழிக்கப்பட்டு விட்டன.

சிறுவர்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 2002ஆம் வருட சாசனத்தை பின்பற்றி இலங்கையும் சிறுவர்களுக்கான தேசீய நடவடிக்கைத் திட்டம் ஒன்றை தயாரித்துவரும் இவ்வேளையில் 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள் தங்கள் உரிமைகளை உறுதிப்படுத்தி ஐக்கிய நாடுகள் சாசனத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு கோருகிறார்கள்.

தேசீய திட்டமிடல் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் உத்தயோகபூர்வ வரைவுக் குழு ஒன்றினால் தயாரிக்கப்பட்டுவரும் இந்த நடவடிக்கைத் திட்டம் அடுத்த மாதம் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட இருக்கிறது.

கல்வி, சுகாதாரம், ஊட்டச்சத்து, சிறுவர் பாதுகாப்பு, யுத்தத்தினாலும் மோதல்களினாலும் பாதிக்கப்படும் சிறுவர்களின் பாதுகாப்பு ஆகியன இத்திட்டத்தில் அடங்கியிருக்குமெடன எதிர்பார்க்கப்பகிறது.

1990களின் பிற்பகுதியில் அதிக பாதுகாப்புச் செலவினத்தடன் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் தாக்கத்துடன் இந்த வருடம் மந்தகதியிலுள்ள அரச வளங்களுக்கும் மத்தியில் சிறுவர்கள் தொடர்பான நான்கு வருட திட்டத்தை அமுல் செய்ய நிதியளிப்பதாக நிதியமைச்சின் செயலாளர் சரித ரத்வத்தை உறுதியளித்துள்ளார்.

இத்திட்டத்தை தயாரிப்பதற்கான ஆலோசக நடைமுறைகள் கடந்த ஜனவரி மாதத்தில் ஆரம்பமானபோதிலும் ஜூன் மாதத்திலேயே சிறுவர்களை இதில் சேர்த்துக் கொள்வதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த 3 மாதங்களில், ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம், இலங்கையின் மிகப்பெரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நிறுவனமான சர்வோதயம் ஆகியவற்றுடன் இணைந்து சிறுவர் பாதுகாப்பு நிதியம் நாட்டிலுள்ள 24 மாவட்டங்களும் உள்ளடங்கிய மாகாணங்களிலும் 8 சிறுவர் பயிற்சிப் பாசறைகளை நடத்தியது.

வுலது குறைந்த சிறுவர்கள் குழவொன்று உட்பட பால் சமத்துவத்தை பிரதிநிதித்துவப் படுத்தி 350க்கும் அதிகமான சிறுவர்கள் இப் பாசறைகளில் கலந்து கொண்டார்கள்.

அரசாங்கம் கிராமப்புற பாடசாலைகளுக்கு செலவிடும் தொகையிலும் பார்க்க நகர்ப்புற பாடசாலைகளுக்கு 3 மடங்கு அதிகமான தொகையை செலவிடுவது பற்றியும் செல்வந்தர்களுக்கும் வறியவர்களுக்குமிடையே அதிக இடைவெளி மற்றும் வறியவர்களுக்கு குறைந்த வளங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளை பலர் எழுப்பினார்கள்.

தொலைக்காட்சிகளில் பாலியல் சம்பவங்கள், வன்செயல்கள் ஆகியவற்றை காண்பிப்பதையும் குறிப்பாக தொலைக் காட்சி நாடகங்களிலும் விளம்பரங்களிலும் பெண்களையும் சிறுவர்களையும் சிறுமைப்படுத்தி காண்பிப்பதையும் நிறுத்தவேண்டுமென்று சிறுவர்கள் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்கள்.

பாசறையில் கலந்துகொண்ட மத்திய மலையக நகரான கண்டியை சேர்ந்த மயூமி நதீஷா விதாச்சி வளங்களை பொறுத்த வகையில் கிராமப்புற பாடசாலைகளுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாக கூறினார். நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்னர்

கொழும்பில் கடைசியாக ஆகஸ்ட் மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற பாசறையில் கலந்தகொண்ட 17 வயதான விதாச்சி நகர்ப்புற பாடசாலைகள் பெற்றுக் கொள்ளும் வளங்களை தாங்தளும் பெற பெரும்பாடுபட வேண்டியதாக இருக்கிறது என்று குறிப்பட்டார்.

நாட்டில் முழுமையாக ஊடக மற்றும் தொலைக்காட்சி கொள்கையை மாற்றச் செய்வதற்கு தாம் பெருமுயற்சி எடுத்து வருவதாகவும் விதாச்சி தெரிவித்தார். "உதாரணமாக நாங்கள் பார்க்க விரும்பும் கல்வி நிகழ்ச்சிகள் நாங்கள் பாடசாலையில் இருக்கும் நேரமான காலை 8 மணிக்கும் பிற்பகல் 2 மணிக்குமிடையே காண்பிக்கப்படுகின்றன. இது அபத்தமானது அல்லவா?" என்று அவர் கூறினார்.

மற்றுமொரு மத்திய பிராந்திய நகரமான பதுளையை சேர்ந்த 16 வயதான கௌசல்யா சசந்தகலானி தொலைக்காட்சியில் புகைபிடிப்பதையும் மது அருந்துவதையும் அடிக்கடி காண்பிப்பது இன்னமொரு உபத்திரவமான காட்சியாகும் என்று கூறினார். பிரபல காட்டுன் நிகழ்ச்சிகளிலும்கூட எவராவது ஒருவர் சிகரட் புகைத்துக் கொண்டு அல்லது மது அருந்திக் கொண்டு நிற்பதை காண்பிப்பதாக கௌசல்யா கூறினார்.

தற்போது 14 வயதான சானக பிரதீப் கருணாரத்ன 12 வயதாக இருந்தபோது தந்தையை இழந்துவிட்டார். தாயார் பெரும்பான்மையின மத்தள் கூடுதலாச வசிக்கும் வடபகுதிக் கிராமங்களை தமிழ் கிளர்ச்சிக்காரர்களிடமிருந்து பாதுகாக்கும் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளார்.

தமது முதல் அக்கறை கல்வியே என்று கூறும் கருணாரத்ன மாணவர்களுக்கு பாடநூல்கள் கிடைப்பதில்லை என்கிறார். கற்பிக்கும் உபகரணங்களும் மத்தியிலிருந்து தூர இடத்து பாடசாலைகளுக்கு கிடைப்பதில்லை என்று அவர் தெரிவித்தார். யுனிசெவ் ஸ்தாபனத்தில் கடமையாற்ற விரும்பும் கருணாரத்ன தங்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறையாக இருப்பதாகவும் கூறினார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த ராஜரத்தினம் சுதர்சன் யுத்தத்தின் பாரிய தாக்கம் கல்வியில்தான் என்று கூறினார். எங்களிடம் ஆசிரியர்களும் இல்லை தனபாடங்கள் கட்டிடங்களும் இல்லை என சுதர்சன் கூறினார். யுத்தத்தின்போது எமது கல்வியை இழந்து விட்டோம் என்று 18 வயதான சுதர்சன் தெரிவித்தார். அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கமிடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் சமரச தீர்வு ஒன்றுக்கு வழி வகுக்கு மெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

1960ஆம் ஆண்டில் 5 சதவீதமாக இருந்த கல்விக்கான பொது செலவுகள் 1999ஆம் ஆண்டில் 2.9 சதவீதமாக குறைக்கப்பட்டது. கல்வி செலவினத்துக்கென உலக வங்கி சிபார்சு செய்த மட்டம் இதுவாகும்.